முழுப்பதிப்புரிமையுடையது *All Rights Reserved]*

மாகாணக் கல்வித் திணைக்களம், வடக்கு மாகாணம்
Provincial Department Of Education.Northern Province
மூன்றாம் தவணைப் பரீட்சை - யூலை 2026

தரம்-12 (2027)	21 - பொருளியல் -1,11	மூன்று மணித்தியாலயங்கள் 10 நிமிடங்கள்

அறிவுறுத்தல்கள்:
- வினாப்பத்திரம் ஒன்றில் 1 தொடக்கம் 20 வரையான பல்தேர்வு வினாக்கள் அனைத்திற்கும் மிகப் பொருத்தமான விடையினை தெரிவு செய்க.
- வினாப்பத்திரம் இரண்டில் பகுதி "அ" இலிருந்து இரண்டு வினாக்களையும், பகுதி "ஆ" இலிருந்து இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து மொத்தமாக நான்கு வினாக்களிற்கு விடையளிக்குக.

பகுதி I

1. அமெரிக்கா ஈரான் யுத்தத்தின் போது இலங்கை நடுநிலை வெளிநாட்டு கொள்கையை பின்பற்ற வேண்டும் இல்லையெனில் அதன் ஏற்றுமதிச் சந்தைகள் பாதிக்கப்படும் என பொருளாதார ஆய்வாளர் ஒருவர் கூறுகிறார். இதில் நியமக்கூற்று **(Normative Statement)** எது?
   (1) அமெரிக்க ஈரான் மோதலால் உலக வர்த்தகம் பாதிக்கின்றது.
   (2) இலங்கையின் ஏற்றுமதி வருமானம் குறையக்கூடும்.
   (3) உலகசந்தைகளில் நிச்சயமற்ற தன்மை அதிகரிக்கின்றது.
   (4) இலங்கை நடுநிலை வெளிநாட்டு கொள்கையை பின்பற்ற வேண்டும்.
   (5) போர் காரணமாக கப்பல் காப்புறுதி செலவு உயர்வடைகின்றன.


2. ஒரு நிறுவனம் செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான பகுப்பாய்வு முறையை அறிமுகப்படுத்தியதால் இயந்திரங்கள் செயலிழக்கும் நேரம் **(Downtime)** குறைந்தது. இதன்விளைவாக முதலீடு செய்யப்பட்ட நிலையான மூலதனத்தின் பயன்பாட்டு வீதம் அதிகரித்தது. இந்நிலையின் மிகச் சரியான பொருளாதார விளக்கம் யாது?
   (1) மூலதனத்தின் அமையச் செலவு குறைந்துள்ளது.
   (2) மூலதனத்தின் எல்லை உற்பத்தி பூச்சியமாகியுள்ளது.
   (3) மூலதனத்தின் விளைதிறன் உயர்ந்து சராசரி உற்பத்தி அதிகரித்துள்ளது.
   (4) தொழிலாளர் தேவை முழுமையான இல்லாமல் போயுள்ளது.
   (5) ஊழியத்திற்கான கேள்வி அதிகரித்துள்ளது.

3. நாடொன்றில் தனியார் நிறுவனங்கள் இலாபநோக்கில் சுதந்திரமாக உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன. அதேவேளை அரசு சமூக பாதுகாப்பு திட்டங்கள், வேலை இழப்பு நிவாரணம், மருத்துவ உதவிதிட்டங்கள் மற்றும் போட்டி எதிர்ப்பு சட்டங்கள் (**Anti-trust laws**) மூலமாக சந்தைத் தோல்விகளை கட்டுப்படுத்த முயல்கின்றது. இந்நிலையை அடிப்படையாகக் கொண்டு இந்நாட்டின் பொருளாதார அமைப்பு எத்தகையதாக இருக்கும்?
   (1) உற்பத்தி வளங்களின் உரிமை முழுமையாக அரசுடைமையை அடிப்படையாக கொண்ட சமூகவாதப் பொருளாதாரம் ((Socialist Economy).
   (2) சமூகநலன் மற்றும் சந்தை இயங்குமுறையை இணைக்கும் சமூகச்சந்தைப் பொருளாதாரம்.
   (3) நுகர்வோர் விருப்பங்களுக்கு இடமில்லாத கட்டளைப் பொருளாதாரம்.
   (4) பாரம்பரிய மரபுகள் மூலம் உற்பத்தித் தீர்மானங்கள் எடுக்கப்படும் பொருளாதாரம்.
   (5) அரசதலையீடு முற்றிலும் இல்லாத தூய முதலாளித்துவப் பொருளாதாரம்.

4. ஒரு பொருளாதாரத்தின் உற்பத்தி சாத்திய வளையி ஆரம்பத்தில் வெளிப்புறமாக குவிந்த வடிவில் காணப்பட்டது. பின்னர் செயற்கை நுண்ணறிவு மற்றும் தன்னியக்க தொழில்நுட்பம் என்பன உற்பத்தி துறையில் அறிமுகப்படுத்தப்பட்டதால் குறிப்பிட்ட வளங்கள் பல உற்பத்திகளிற்கு சமதிறனுடன் பயன்படுத்தப்பட்டன. இதன் விளைவாக உற்பத்தி சாத்திய வளையியின் வடிவம் நேர்கோடாக மாறுகின்றது. இந்நிலையில்
   (1) அனைத்து வளங்களும் ஒரு உற்பத்திக்கு பொருத்தமானதாக மாறுகின்றது.
   (2) வளங்களின் அருமை முற்றாக நீங்கியுள்ளது.
   (3) உற்பத்தி சாத்திய வளையி இடதுபுறம் நகர்கின்றது.
   (4) சந்தர்ப்பச்செலவு அதிகரிக்கும் தன்மையிலிருந்து நிலையான செலவிற்கு மாறுகின்றது.
   (5) வளங்களின் சிறப்புபடுத்தல் அதிகரிப்பதால் சந்தர்ப்பச் செலவு வேகமாக உயர்கின்றது.

Past Papers Wiki

5. மூலதனப் பண்டங்களையும் நுகர்வுப் பண்டங்களையும் உற்பத்தி செய்யும் அமெரிக்கா மற்றும் கியூபா ஆகிய இரு நாடுகளின் உற்பத்திச் சாத்திய வளையிகளை பின்வரும் வரைபடம் காட்டுகின்றது. இரு நாடுகளின் வளையிகளும் ஒன்றை ஒன்று வெட்டும் புள்ளி **A** இல் உற்பத்தி செய்யுமாயின் மூலதனப் பொருள், நுகர்வுப் பொருட்களில் பெற்றுக் கொள்ளும் அலகுகள்



	மூலதனப் பொருள்	நுகர்வுப் பொருள்
(1)	200	300
(2)	600	400
(3)	1000	400
(4)	600	200
(5)	600	300


6. ஒரு பொருளின் விலையில் ஏற்படும் மாற்றம் குறித்த பொருளின் அளவில் ஒரு வீழ்ச்சியை ஏற்படுத்துகின்றது. இது நிச்சயமாக நிகழவேண்டுமாயின் பொருளின் தன்மை விலைமாற்றத்தின் திசை என்னவாக இருக்க வேண்டும்

	பொருளின் தன்மை	விலைமாற்றம்
(1)	கிபன் பொருள்	அதிகரிப்பு
(2)	சாதாரண பொருள்	அதிகரிப்பு
(3)	சாதாரண பொருள்	வீழ்ச்சி
(4)	இழிவுப்பொருள்	வீழ்ச்சி
(5)	சமூகஅந்தஸ்து பொருள்	அதிகரிப்பு

7. X மற்றும் Y பொருட்கள் ஒன்றுக்கொன்று மாற்றீடுகளாகும். Y பொருளின் வளங்களில் ஏற்படும் குறைவானது X பொருளின் சமநிலை விலையிலும் சமநிலை தொகையிலும் எத்தகைய விளைவை ஏற்படுத்தும்?

	X இன் விலை	**X இன் தொகை**
(1)	குறைவடையும்	குறைவடையும்
(2)	குறைவடையும்	அதிகரிக்கும்
(3)	அதிகரிக்கும்	குறைவடையும்
(4)	அதிகரிக்கும்	அதிகரிக்கும்
(5)	குறைவடையும்	மாற்றமில்லை

8. ஒரு பொருளுக்கான கேள்வி வளையியை வரைபடம் காட்டுகின்றது. OATM இன் பரப்பளவும் OLNH இன் பரப்பளவும் ஒன்றுக்குகொன்றுக்கு சமனாக இருக்குமாயின்



(1) விலை OL இல் இருந்து OA ஆக உயர்ந்தால் மொத்த வருமானம் குறையும்.
(2) விலை OL இல் இருந்து OA ஆக உயர்ந்தால் , நுகர்வோர் மிகை LATN ஆல் அதிகரிக்கும்
(3) OA, OL ஆகிய இரு விலைகளிலும் விலைக் கேள்வி நெகிழ்ச்சி அலகு நெகிழ்ச்சியாகும்
(4) விலை OA இல் இருந்து OL ஆக குறைவது , கேள்வி அளவில் அதே வீதாசார வீழ்ச்சியை ஏற்படுத்தும்.
(5) AL என்ற விலை வீச்சில் அல்லது நடுப் புள்ளியில் விலைக் கேள்வி நெகிழ்ச்சி ஒன்றுக்கு சமனானதாகும்.

9. ஒரு ஆய்வில் வெண்ணெய் மற்றும் மாஜரின் ஆகியவற்றிற்கு இடையிலான குறுக்கு கேள்வி நெகிழ்ச்சி **+3** என கண்டறியப்பட்டது. மாஜரினின் விலை **15%** குறைந்தால் வெண்ணெய் கேள்வியில் என்ன மாற்றம் ஏற்படும்?

(1) 15% அதிகரிக்கும் (2) 30% அதிகரிக்கும **(3)** 45% குறையும்
(4) 45% அதிகரிக்கும் (5) மாற்றமெதுவும் நிகழாது

10. ஒரு பொருளின் கேள்வி அதிகரிக்கும் அதே நேரத்தில் அதன் உற்பத்திச் செலவும் அதிகரிக்கின்றது. இதன் விளைவாக சந்தை சமநிலை குறித்து உறுதியாக கூறப்படுவது

(1) சமநிலை கண்டிப்பாக குறையும்.
(2) சமநிலை அளவு கண்டிப்பாக உயரும்.
(3) சமநிலை விலை உயரும் வாய்ப்பு அதிகம்.
(4) சமநிலை அளவு மாறாது.
(5) நிரம்பல் வளையி வலப்புறம் நகரும் கேள்வி வளையி இடப்புறம் நகரும்.

11. யாழ்ப்பாண மாநகர சபை, தனது அதிகாரத்துக்கு உட்பட்ட பகுதியில் வீட்டு வாடகையை , நிலவும் சமநிலை வாடகையை விட, ரூபா 7000 குறைவாக நிர்ணயிக்கும், ஒரு வாடகைக் கட்டுப்பாட்டு சட்டத்தை விதிக்குமாயின்

(1) வழங்கப்படும் குடியிருப்புகளின் அளவு அதிகரிக்கும்.
(2) வருமானம் குறைந்த ஏழை மக்கள் குறைவான வாடகையில் தேவையான அளவு குடியிருப்புக்களை பெறக்கூடியதாக இருக்கும்.
(3) வாடகைக்கு வழங்கப்படும் குடியிருப்பு சந்தையில் நிலவி வந்த மீளமுடியா இழப்பு **(DWL)** அகற்றப்படும்.
(4) வாடகைக்கு வழங்கப்படும் குடியிருப்புகளின் சமநிலையில் மாற்றம் ஏற்பட்ட போதும் பொருளாதார மிகை மாற்றமடையாதிருக்கும்.
(5) தேவைப்படும் குடியிருப்புகளின் அளவு அதிகரிக்கும்.


12. **"திராட்சைப்பழச்"** சந்தையில் அரசாங்கம் சமநிலையைவிட குறைந்தபட்ச கட்டுப்பாட்டு விலையை நிர்ணயித்து சந்தையில் உருவாகும் மிகை நிரம்பலை அரசாங்கமே கொள்வனவு செய்கின்றது. இந்நிலையில் மிகச்சரியாக ஏற்படக்கூடிய விளைவு எது?

(1) நுகர்வோர் மிகை மற்றும் உற்பத்தியாளர் மிகை இரண்டும் கட்டாயமாக அதிகரிக்கும்.
(2) சந்தைச் சமநிலை மாற்றமின்றி தொடரும்.
(3) அரசாங்கச் செலவினம் அதிகரித்து செயற்கையான உற்பத்தி ஊக்குவிப்பு உருவாகும்.
(4) திராட்சைப்பழ வழங்கல் குறைந்து பற்றாக்குறை உருவாகும்.
(5) வாய்ப்பு செலவு முற்றிலும் இல்லாத நிலை உருவாகும்.

PAST PAPERS WIKI

13. அரசாங்கம் உச்சபட்ச விலையை OM_1 ஆக நிர்ணயித்துள்ளது. இதனால் பின்வருவனவற்றுள் எது நிகழ்ந்திருக்கும்

(1) OQ2 வின் விநியோகங்களுக்கான உத்தரவாதத்தை வழங்கும்
(2) OQ அளவை சந்தைச் சமநிலை தொகையாக பேணும்
(3) MM_1 அளவு அரசாங்க உதவித் தேவை வெளிப்படுத்தும்
(4) OQ அளவு உற்பத்தியை ஏற்றுமதி செய்யும்
(5) Q_2Q_1 அளவினை அரசு கொள்வனவு செய்ய வேண்டிய நிலையை ஏற்படுத்தும்



14. ஒரு விவசாய நிலத்தின் அளவு மாறாமல் இருக்கும் நிலையில் தொடர்ந்து கூடுதல் தொழிலாளர்கள் சேர்க்கப்படுகின்றனர். ஒரு கட்டத்திற்குப் பிறகு எல்லை உற்பத்தி குறையத் தொடங்குகிறது. இதற்கான மிகச்சரியான காரணம் எது?
(1) தொழிலாளர் திறன் தானாக குறைகின்றது.
(2) சந்தை தேவை குறைகின்றது.
(3) சராசரி உற்பத்தி எப்போதும் எதிர்மறையாக மாறுகின்றது.
(4) அமையச்செலவு பூச்சியமாகின்றது.
(5) நிலம் மற்றும் மூலதனம் போன்ற காரணிகள் நிலையான காரணிகள் ஒப்பீட்டளவில் பற்றாக்குறையாக மாறுகின்றன.

15. பின்வரும் கூற்றுகளில் சரியான கூற்றினை தெரிவு செய்க?
(1) எல்லைச் செலவுக்கோடு எப்பொழுதும் சராசரி மொத்தச்செலவு மற்றும் சராசரி மாறும் செலவுக் கோடுகளை அதன் அதி தாழ்ந்த புள்ளிகளினூடாக வெட்டிச்செல்லாது.
(2) எல்லைச் செலவுக் கோட்டின் சரிவுனூடாக மொத்த நிலையான செலவு காட்டப்படும்.
(3) சராசரி செலவுக்கோடு மேல்நோக்கிச் செல்லும் போது எல்லைச்செலவுக் கோடு, சராசரிச் செலவுக்கோட்டுக்கு கீழாக அமையும்.
(4) எல்லைச் செலவுக்கோடு எப்பொழுதும் சராசரி மொத்தச்செலவு மற்றும் சராசரி மாறும் செலவுக் கோடுகளை அதன் அதி தாழ்ந்த புள்ளிகளினூடாக வெட்டிச்செல்லும்.
(5) சராசரி நிலையான செலவுக்கோடானது மேலிருந்து கீழ்நோக்கிச் செல்லும் நேர்கோடாக காணப்படும்.

16. ஒரு தொழிலில் நிறுவனங்கள் நீண்டகாலத்தில் சாதாரண இலாபத்தினை மட்டுமே உழைக்கின்றது ஆனால் ஒவ்வொரு நிறுவனமும் தமது தயாரிப்பை வேறுபடுத்திக்காட்ட விளம்பரச் செலவினை தொடர்ந்து மேற்கொள்கின்றது. மேலும் நிறுவனம் எதிர்கொள்ளும் கேள்விக்கோடு சாதாரண கேள்விக்கோடாக காணப்படுகின்றது இந்நிலைக்கு சரியான விளக்கம்.

(1) இது நிறைபோட்டிசந்தை ஏனெனில் நீண்டகாலத்தில் சாதாரண இலாபம் மட்டுமே உழைப்பதால்.
(2) இது தனியுரிமை சந்தை ஏனெனில் கேள்விக் கோடு சாதாரண கேள்விக்கோடாக காணப்படுவதால்.
(3) இது சிலருரிமைச் சந்தை ஏனெனில் விளம்பரம் காணப்படுவதால்.
(4) இது தனியுரிமைப் போட்டிச்சந்தை தயாரிப்பு வேறுபாடுகள் மற்றும் சுதந்திர நுழைவு இணைந்து காணப்படுவதால்.
(5) இது இருவர் உரிமை ஏனெனில் விலைக்கட்டுப்பாடு காணப்படுவதால்.

17. ஒரு நாட்டில் பின்வரும் நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன
A. குடும்பத்தாய் தன் வீட்டில் குழந்தையை பராமரித்தல்.
B. அரச வைத்தியசாலையில் இலவச சிகிச்சை வழங்கல்.
C. விவசாயி தன் குடும்பம் பயன்படுத்த அரிசி உற்பத்தி செய்தல்.
D. நண்பருக்கு இலவசமாக மோட்டார் சைக்கிள் பழுதுபார்த்தல்.
E. நிறுவனம் ஒன்று சந்தைக்காக மென் பொருளை உருவாக்குதல்.
தேசிய கணக்கீட்டில் உற்பத்தி எல்லைக்குள் அடங்குபவை எவை?

(1) C,B மற்றும் C மட்டும் (2) B,C மற்றும் E மட்டும **(3)** B,D மற்றும் 5 மட்டும்
(2) A,C,D மற்றும் E மட்டும (5) அனைத்தும்

18. ஒரு தொழிலதிபர் தமக்குச் சொந்தமான கட்டடிடத்தில் ஒரு வெதுப்பகத்தினை நடாத்துகின்றார். மாதாந்தம் அவர் செலுத்தும் கூலி மின்சாரக்கட்டணம் மற்றும் மூலப்பொருள் செலவு ரூபா 450000 ஆகும். அதே கட்டிடத்தை வாடகைக்கு விடப்பட்டால் ரூபா 120000 கிடைக்கும். தொழிலதிபர் வேறு நிறுவனத்தில் பணி புரிந்தால் ரூபா 80000 சம்பளம் பெறுமுடியும்.
இந்நிலையில் கீழ்கண்ட கூற்றில் சரியானது
(1) வெளிப்படையான செலவு ரூபா 650000
(2) உட்கிடையான செலவு ரூபா 200000
(3) மொத்த பொருளியல் செலவு ரூபா 450000
(4) வெளிப்படையான செலவு சி உட்கிடையான செலவு
(5) உட்கிடையான செலவில் மூலப்பொருள் செலவு அடங்கும்

19. ஒரு நாட்டின் பொருளாதாரத்தில் பின்வரும் தகவல்கள் தரப்பட்டுள்ளன(அனைத்து தரவுகளும் மில்லியன்களில்)

தனியார் நுகர்வு செலவு	850
முதலீட்டுச் செலவு	250
அரசாங்க செலவு	300
ஏற்றுமதி	180
இறக்குமதி	220
வெளிநாட்டில் இருந்து கிடைத்த நிகர காரணி வருமனாம்	40
நிலையான மூலதன நுகர்ச்சி	60

மேலுள்ள தகவல்களின்படி

	மொத்த உள்நாட்டு உற்பத்தி	மொத்த தேசிய வருமானம்	தேறிய ஏற்றுமதி
(1)	1400 மில் ரூபா	1360 மில் ரூபா	180 மில் ரூபா
(2)	1360 மில் ரூபா	1340 மில் ரூபா	-40 மில் ரூபா
(3)	1340 மில் ரூபா	1400 மில் ரூபா	-90 மில் ரூபா
(4)	1250 மில் ரூபா	1360 மில் ரூபா	400 மில் ரூபா
(5)	1360 மில் ரூபா	1400 மில் ரூபா	-40 மில் ரூபா

20. அரச நடவடிக்கையற்ற எளிய பொருளாதாரம் ஒன்றில் வருமானம் 1000மில்லியனில் நுகர்வுச் செலவு 800 மில்லியனாகவும், வருமானம் 1500 மில்லியனாக அதிகரிக்கும் போது நுகர்வுச் செலவு 1100 மில்லியனாகவும் காணப்பட்டது. இப்பொருளாதாரத்தின் எல்லை நுகர்வு நாட்டம் மற்றும் 1000 மில்லியன் வருமானத்தில் சராசரி நுகர்வு நாட்டம் முறையே

(1) 0.06, 0.8
(2) 0.75, 0.6
(3) 0.6, 08
(4) 06, 0.4
(5) 0.25, 0.75

(1x20=20 புள்ளிகள்)

Past Papers Wiki

பகுதி II

அ, ஆ பகுதிகளில் இருந்து குறைந்தது இரண்டு வினாக்களை தெரிவு செய்து மொத்தமாக நான்கு வினாக்களுக்கு விடை தருக

01. "அ" பகுதி

1. பொருளாதார வளங்களை திறமையாக முகாமை செய்யாவிடில் ஏற்படக்கூடிய விளைவுகளை குறிப்பிடுக. (4 புள்ளி)
2. "மூலதனம் தனித்து உற்பத்தியை மேற்கொள்ள முடியாது" இக்கூற்றை பொருளாதார வளங்களுடன் தொடர்பு படுத்தி ஆராய்க. (4 புள்ளி)
3. பின்வரும் ஒவ்வொரு கூற்றுக்களும் அமெரிக்க ஈரான் மோதலால் உற்பத்திச் சாத்திய வளையியில் என்ன மாற்றம் ஏற்படும் என்பது குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கூற்றுக்கள் சரியானவையா? அல்லது தவறானவையா? என்பதனை கூறி காரணங்களுடன் விளக்குக.

   A. அமெரிக்கா ஈரான் மோதலால் உலக எண்ணெய் விலை கடுமையாக உயர்வடைவதால் உற்பத்திச் சாத்திய வளையியின் உட்புறத்தில் உற்பத்தி இடம் பெறும்.
   B. சிலநாடுகள் பாதுகாப்புச் செலவினத்தினை அதிகரித்து இராணுவ உற்பத்தியை விரிவு படுத்துவதனால் உற்பத்தி சாத்திய வளையியில் ஓர் புள்ளியில் இருந்து இன்னொரு புள்ளிக்கு நகர்வு ஏற்படும்.
   C. சர்வதேச வர்த்தக தடை காரணமாக மூலப் பொருள் இறக்குமதி குறைவடைய உற்பத்திச் சாத்திய வளையி இடது புறம் நகரும்.
   D. எண்ணெய் இறக்குமதி நாடுகள்மாற்று எரிசக்தி தொழில்நுட்பத்தினை வெற்றிகாரமாக அறிமுகப்படுத்துவதனால் உற்பத்திச் சாத்திய வளையி இடது புறம் நகரும் (4 புள்ளி)

4. கலப்பு பொருளாதாரங்கள் ஏன் வளர்ந்து வரும் நாடுகளுக்கு ஏற்றது எனப் பொருளியலாளர்கள் குறிப்பிடுவதற்கான காரணங்களை குறிப்பிடுக (4 புள்ளி)
5. மனித மூலதனம் என்றால் என்ன? அதனை மேம்படுத்தும் வழிமுறைகளை குறிப்பிடுக. (4 புள்ளி)

02.

1) கடலை எண்ணெய்யின் சந்தைக் நிரம்பலை நிர்ணயிக்கும் காரணிகளை பட்டியல்படுத்துக? (4 புள்ளி)
2) குறித்தவொரு பொருளினது நேரான கேள்விக் கோட்டினது விலைக்கும் அதன் சந்தை கேள்வித் தொகைக்கும் இடையிலான தொடர்பின பின்வரும் அட்டவணை காட்டுகின்றது

விலை	கேள்வித்தொகை (மெற்றிக் தொன்)
0	200
20	150
40	100
60	50
80	0

a. இங்கு குறித்த பொருளின் விலை 60 இல் இருந்து 40 ஆக குறைந்த போதும் 20 ரூபாவில் இல் இருந்து 40 ரூபா ஆக அதிகரிக்கும் போதும் உற்பத்தியாளர் வருமானத்திற்கு யாது நிகழும்? அதற்கான காரணம் யாது? (4 புள்ளி)

b. எந்த விலையில் விற்பனையாளர் வருமானம் உச்சமாக இருக்கும்? (2புள்ளி)

Past Papers Wiki

c. இப்பொருளை உற்பத்தி செய்யும் உரிமத்தை ஒரு நிறுவனம் மட்டும் கொண்டுள்ளதாக கருதுக அந்நிறுவனம் 50 மெற்றிக்தொன் நிலையான அளவை நிரம்பல் செய்யுமாயின் சமநிலை விலை தொகை யாதாக இருக்கும்? (2 புள்ளி)

3) முற்றாக நெகிழ்வற்ற கேள்வியினையுடைய பண்டத்திற்கு அலகு வரி விதிக்கப்பட்ட பின்னர் உள்ள பண்புகளை குறிப்பிடுக? (4புள்ளிகள்)

4) ஒரு பொருளுக்கான கேள்வியை மிகவும் நெகிழ்ச்சியற்றதாக மாற்றக்கூடிய நான்கு காரணங்களை குறிப்பிடுக. (4 புள்ளிகள்)

03.

1) உச்சவிலை என்பதனால் கருதப்படுவது யாது? உச்ச விலை விதிக்கப்படுவதனால் ஏற்படும் பொருளாதார விளைவு யாவை? (4 புள்ளிகள்)

2) பின்வரும் கூற்றுக்கள் ஒவ்வொன்றும் உண்மையானவயா? அல்லது பொய்யானவையா? அதற்கான காரணம் என்ன என்பதை குறிப்பிடுக.

A. கேள்வி நெகிழ்ச்சியற்ற சந்தையில் மறைமுகவரியின் சுமை பெரும்பாலும் நுகர்வோர் மீது சுமத்தப்படும்

B. சமநிலையில் கேள்வி அதிகரிப்பை விட நிரம்பல் அதிகரிப்பு அதிகமாக இருந்தால் விலை குறையும் அழுத்தம் ஏற்படும்

C. சந்தை சமநிலை உருவாக வேண்டுமானால், ஆகக் கூடிய கேள்வி விலையை காட்டிலும் ஆகக் குறைந்த நிரம்பல் விலை உயர்வாக அமைய வேண்டும்.

D. கேள்வி நிரம்பல் இரண்டும் ஒன்றுக்கு சமமான நெகிழ்ச்சியைக் கொண்டிருந்தால் வரிவிதிப்பு சந்தைச் சமநிலையில் எந்த தாக்கத்தையும் ஏற்படுத்தாது (4 புள்ளிகள்)

3) அரசாங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்ட தளவிலைச் சட்டமானது, விலை ஆதரவுத் திட்டத்தின் கீழ், மிகை நிரம்பலைக் கொள்வனவு செய்வதன் மூலம் அமுல்படுத்தப்படுவதாக கருதுக. இந்நிலையில் அரசாங்கத் தலையீடு காரணமாக ஏற்பட்ட சமூக நல இழப்பீடு மற்றும் மீள முடியாத இழப்பீட்டின் பரப்பளவுகளை, வரைபடம் ஒன்றில் குறித்து காட்டுக? (4 புள்ளி)

4) "நெத்தலி" மீனின் கேள்வி நிரம்பல் சமன்பாடுகள் பின்வருமாறு

QD= 60-2P
QS=-15+3p
இப்பண்டத்தின் உற்பத்தியாளர் மீது அரசு 5 ரூபாவினை அலகு வரியாக விதிப்பதாக கொள்க வரிக்குப்பின்

அ. நுகர்வோன் மிகை எவ்வளவு? (4 புள்ளிகள்)
ஆ. மீள முடியாத நலன் இழப்பு எவ்வளவு? (4 புள்ளிகள்)

"ஆ" பகுதி

04.

1. வெளிப்படையான செலவவையும் உட்கிடையான செலவையும் விளக்கி உதாரணம் தருக.(4புள்ளி)
2. நிறுவனத்தின் எல்லைச் செலவிற்கும்,மாறும் செலவுக்கும் இடையிலான தொடர்பினை ஆராய்க. (4 புள்ளி)
3. (அ) விலை உருவாக்குவோன்,விலை அமைப்போன் என்பதனை விளக்குக. (2 புள்ளி)

(ஆ) நிறைபோட்டி நிறுவனத்தின் குறுங்கால உற்பத்தி நடத்தை பற்றிய தரவுகள் பின்வருமாறு

வெளியீடு	500 அலகுகள்
சராசரி வருமானம்	50 ரூபா
சராசரி மொத்த செலவு	80 ரூபா
சராசரி நிலையான செலவு	30 ரூபா

1. நிறுவனம் அடையும் இலாபம் அல்லது நட்டம் எவ்வளவு? (3 புள்ளி)
2. நிறுவனம் தொடர்ந்து தொழிலில் ஈடுபடுமா? இல்லையா? காரணம் யாது? (3 புள்ளி)

4. நிறைபோட்டிச் சந்தைக்கும் தனியுரிமை போட்டிச் சந்தைக்கும் இடையிலான வேறுபாடுகள் எவை? (4 புள்ளி)

05.

1) தேசிய கணக்கீட்டில் கீழே தரப்படும் நிறுவனங்கள் எத்தகைய நிறுவனக் கட்டமைப்புகளுள் உள்ளடக்கப்படும்

A. காப்புறுதிக் கூட்டுத்தாபனம் B. கார்கில்ஸ் பூட் சிற்றி (Cargills Food City)
C. கொழும்பு மாநகர சபை D. உலகவங்கி
E. இலங்கை பரீட்சைத் திணைக்களம் (4 புள்ளிகள்)

2) தேசிய கணக்கீட்டில் "முதலீட்டுச் செலவு பொருளாதார வளர்ச்சியின் முக்கிய நிர்ணயிப்பானாகும்" இதனை செலவுவழித் தேசிய கணக்கீட்டுடன் தொடர்புபடுத்தி விளக்குக (4 புள்ளிகள்)

3) ஒருநாடு மொத்த பொருளாதார செயற்பாட்டின் மூலமாக நிறைவேற்றிக் கொள்ள எதிர்பார்க்கும் நோக்கங்கள் எவை? (4 புள்ளிகள்)

4) பின்வரும் தரவுகள் தேசிய வருமானக் கணிப்பீடு பற்றியதாகும். தரவுகளை அடிப்படையாக கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக

தரவுகள்	மில். ரூபா
தனியார் நுகர்வுச் செலவு	4000
மொத்த உள்நாட்டு மூலதனவாக்கம்	500
நிலையான மூலதன நுகர்ச்சி	100
இருப்புக்களின் மாற்றம்	50
அரச கொள்வனவு	150
தேறிய ஏற்றுமதி	50
வெளிநாட்டிலிருந்தான தேறிய முதனிலை வருமானம்	300
வெளிநாட்டிலிருந்தான தேறிய இரண்டாம் தர வருமானம்	200

கணிப்பிடுக

a. மொத்த உள்நாட்டு செலவு யாது?
b. மொத்த உள்நாட்டு உற்பத்தி யாது?
c. தேறிய தேசிய வருமானம்?
d. செலவிடக்கூடிய தேசிய வருமானம்? (8 புள்ளிகள்)

06.

1. தன்னிச்சையான நுகர்வு, தூண்டப்பட்ட நுகர்வையும் வேறுபடுத்துக? (4 புள்ளிகள்)
2. ஒரு பொருளாதாரத்தின் மொத்த செலவு என்பதனை விளக்குக. அதில் உள்ளடங்கும் கூறுகள் எவை? (4 புள்ளிகள்)
3. கருதுகோள் ரீதியான ஒரு பொருளாதாரத்தின் எல்லை நுகர்வு நாட்டம் 0.8 எனக் கொள்க. இப்பொருளாதாரத்தின் மாற்றல் பெருக்கியின் பெறுமதியைக் கணிப்பிட்டு அரசாங்கத்தின் மாற்றல் 300 மில்லியன் ரூபாவினால் அதிகரிக்குமாயின் சமநிலை வருமானத்தில் ஏற்படும் அதிகரிப்பைக் கணிப்பிடுக? (4 புள்ளிகள்)

4. அரசதுறையுள்ள முடிய பொருளாதாரம் ஒன்றின் பேரினப் பொருளாதார மாறிகள் உமக்கு தரப்படுகின்றது (அனைத்து தரவுகளும் மில்லியன் ரூபாயில்)

நுகர்வு (C)= 200 + 0.8yd
முதலீடு (I)= 100
அரசாங்க செலவு (G) = 200
வரிகள் (T)= 100

அ. சமநிலைத் தேசியவருமானமட்டம் எவ்வளவு? (4 புள்ளிகள்)

ஆ) சமநிலையில் நுகர்வு, சேமிப்பின் அளவு எவ்வளவு? (4 புள்ளிகள்)

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi

Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Papers Library